செ.வெ.எண்.281/2009/செமதொஅ நாள்: 05.09.2009

**காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடைபெற்று வரும் நெடுஞ்சாலைத்துறை பணிகள் குறித்து மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் ஆய்வு செய்தார்.**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் நெடுஞ்சாலைத்துறையின் மூலம் நடைபெற்று வரும் சாலை மற்றும் மேம்பாலப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் இன்று (05.09.2009) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் முன்னிலை வகித்தார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் நெடுஞ்சாலைத்துறை அரசு செயலர் திரு.ஜி.சந்தானம்,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா,இ.ஆ.ப., நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் திரு.பாலாஜி, சட்டன்ற உறுப்பினர்கள் திரு.க.சுந்தர், திரு.எஸ்.ஆர்.ராஜா, திருமதி.டி.யசோதா, திரு.து.மூர்த்தி, திருமதிசக்தி பெ.கமலாம்பாள், திருமதி. சங்கரி நாராயணன், டாக்டர்.காயத்ரிதேவி, மாவட்ட ஊராட்சி தலைவர் திரு.த.துரைசாமி, உள்ளாட்சி அமைப்புக்களின் தலைவர்கள், நெடுஞ்சாலைத்துறை அலுவலாகள், பொறியாளர்கள் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஆய்வுக் கூட்டத்திற்கு பின், மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசுகையில், “மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறை முதல்வராக பொறுப்பேற்ற பின், கடந்த 3 ஆண்டுகளில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் நெடுஞ்சாலைத்துறையின் மூலம் நடைபெற்று வரும் சாலைகள், பாலங்கள் போன்ற கட்டமைப்பு பணிகள் குறித்தும், இந்த நிதியாண்டியில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய கட்டமைப்பு பணிகள் குறித்தும் மக்கள் பிரதிநிதிகள், நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்கள் மற்றும் துறையினரோடு ஒத்துழைக்கும் தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், வருவாய்துறை, வனத்துறை ரயில்வே துறை போன்ற துறைகளுடன் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வில் பல்வேறு கருத்துக்கள் எடுத்து வைக்கப்பட்டன.

கடந்த 3 ஆண்டுகளில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகளின் மொத்த மதிப்பு ரூ.844 கோடி ஆகும். இப்பணிகளில் பெரும்பாலான பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. சாலைகளை அகலப்படுத்தும் பணிகளில் நிலம் கையகப்படுத்துதல், மின் கம்பங்கள் மாற்றுதல் போன்ற காரணங்களினால் ஒரு சில பணிகள் காலதாமதம் ஆகின்றன. ரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணிகளில் கிடப்பில் போடப்பட்ட பணிகளும் இரயில்வே துறை அதிகாரிகளுடன் அமர்ந்து பேசி தொய்வில்லாமல் நடைபெற்று வருகின்றன. பல்லாவரம், தாம்பரம் ரயில்வே மேம்பால பணிகளும் வேகமாக நடைபெற்று வருகின்றன. இந்த நிதியாண்டில் ரூ.101 கோடி மதிப்பீட்டில் பல்வேறு சாலை மற்றும் பால பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் விரைவில் வெளியிடப்படும்.

தொழிற்சாலைகள் நிறைந்த ஒரகடம் பகுதியில் ரூ.300 கோடி மதிப்பீட்டில் வண்டலூர்-வாலாஜாபாத் நான்கு வழிப்பாதை மற்றும் சிங்கபெருமாள் கோவில்-திருப்பெரும்புதூர் நான்கு வழிப்பாதை அமைக்கும் சாலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த பணிகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஒரகடம் சாலை சந்திப்பில் ரூ.55 கோடி மதிப்பீட்டில் புதிதாக மேம்பாலம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு விரைவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்படும். நில கையகப்படுத்தும் பணிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் முழு ஒத்துழைப்புடன் துரிதமாக மேற்கொள்ளப்படும்.

பல்லாவரம்-துரைப்பாக்கம் மேம்பாலம், தாம்பரம் மேம்பாலம் போன்ற மேம்பால பணிகள் வருகின்ற மார்ச் 2010க்குள் நிறைவடையும். மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உத்திரவுப்படி காஞ்சிபுரம் சுற்றுச்சாலை அமைக்க நிலம் கையகப்படுத்தப்படும் பணி நடைபெற்று வருகிறது. நிலத்தின் உரிமையாளர்களிடம் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட உள்ளது. சுற்றுச்சாலை அமைக்க ரூ.36 கோடியும், வேகவதி ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க ரூ19 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்த மாத இறுதிக்குள் ஒப்பந்தப்புள்ளி கோரப்படும். சுற்றுலா மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பொன்னேரிக்கரை வழியாக நான்கு வழி சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கடந்த 3 ஆண்டு காலத்தில் 90 ரயில்வே மேம்பாலங்கள் அமைத்திட அனுமதி பெற்று தந்துள்ளார். NH 45, NH4 மற்றும் NH5 ஆகிய தேசிய நெடுஞ்சாலைகளை இணைத்து வெளிவட்ட சாலை அமைக்க ரூ.800 கோடி அனுமதிக்கப்பட்டு, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் நிலம் கையகப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிலம் கையகப்படுத்தப்பட்ட பின் சாலைகள் அமைக்கும் பணிகளை நெடுஞ்சாலைத்துறையின் மூலம் மேற்கொள்ளப்படும்.” என தெரிவித்தார்.

வெளியிடுபவர்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.